# எழுதிப் பழகுவோம்!

**கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்தல்.**

## 1. கடிதம்

1. ஒருவர்க்கொருவர் அன்பை வளர்த்துக்கொள்ள கடிதம் உதவுகிறது.
2. கடிதம் மூலம் பண்டிகைக்கான வாழ்த்துக்களைக் கூறலாம்.
3. கடிதம் மூலம் பயண அனுபவங்களைத் தெரிவிக்கலாம்.

## 2. நாய்

1. நாய்கள் மனிதர்களின் நண்பனாகும்.
2. நாய் அசைவ உணவுகளை விரும்பி உண்ணும்.
3. மோப்பசக்தி நாய்களுக்கு அதிகம்.

## 3. மீன்

1. மீன் தண்ணீரில் நீந்தும்.
2. மீன்களில் பல வகைகள் உள்ளன.
3. மீன்கள் பல வண்ணங்களில் காணப்படும்.

## 4. தொலைபேசி

1. தொலைபேசியை அலெக்ஸ்சாண்டர் கிரகாம்பெல் கண்டுபிடித்தார்.
2. செய்தி பரிமாற்றத்திற்கு தொலைபேசி மிகவும் உதவுகிறது.
3. தொலைபேசியினால் உலகமே சுருங்கி விட்டது.

## 5. படி

1. நாளை அவன் காந்தியின் சுயசரிதை புத்தகம் படிப்பான்.
2. புத்தகம் படிப்பது சிறந்த பொழுதுபோக்கு.
3. நான் மாடிப்படியில் ஏறினேன்.